# வள்ளுவர் வழிகாட்டும் சமுதாய உறவு

62

**நூ. அமிதா ராணி**
**உதவிப்பேராசிரியர்**
**பாரத் மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனம்**
**சென்னை**

**முன்னுரை**

காலத்தால் பழமை வாய்ந்த திருக்குறள் குடும்ப சமுதாய உறவுகளைப் பற்றித் தெளிந்த வடிவில் பதிவு செய்துள்ளது. அவ் உறவுகள் தனிமனித மற்றும் ஒழுக்கம் என்பன குறித்துப் பேசுகின்றன அவ்வாறு வள்ளுவம் வரையறை செய்து வழிகாட்டும் சமுதாய உறவுகளைப் பற்றி இக்கட்டுரையில் காண முற்படுவோம் .

மனிதன் தோன்றிய நாள் முதல் சமுதாய உணர்வு இருந்தே வந்திருக்கிறது. 'உணர்வு'. என்பது உறவு சம்பந்தப்பட்டது. ஏனெனில் மனிதன் தனித்து வாழ முடியாது. சமுதாய உணர்வு மிகப் பழங் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பதற்குக் காலத்தால் பழமை வாய்ந்த ரிக்வேதம் , உலக மக்களே! நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இணைந்து வாழுங்கள் ; ஒரே குரலில் பேசுங்கள் ; ஒன்றுபட்டு முடிவெடுங்கள் என்று கூறி உலகம் முழுவதையும் ஒரே சமுதாயமாகக் கொண்டு சமுதாய உறவின் அவசியத்தை வலியுறுத்துகிறது. (ரிக் வேதம் - 10:191--2).

மனிதன் குடும்பத்தில் இவ்வாறு நடந்து கொள்கிறானோ அவ்வாறே சமுதாயத்தின் நடந்து கொள்கிறான் என்கிறார் உளப்பகுப்பாய்வு இயல் அறிஞர்களான பிராய்ட், ஆலன் முதலானோர் (வாழ்வியல் களஞ்சியம்
8 பக்கம் 585) மனித உறவுகள் சேர்ந்து சமுதாயத்தை நன்னிலையில் நிலைநிறுத்த முடியும். தனிமனிதன் சீராக அமையாவிட்டால் சமுதாயம் சீர்கெட்டுவிடும். தவறான வழி நடக்கத்தொடங்கும் மேற்குறித்த விளக்கத்தின் அடிப்படையில் , பின்வருவனவற்றுள் சமுதாய உறவுகளை மேம்படுத்து வதற்கான கூறுகள் பிரித்து விளக்கப்படுகின்றன.

**1. தனி மனித ஒழுக்கம்**

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க விரும்பிய பொதுமறை , தனிமனித ஒழுக்கத்திற்குச்சிறப்பிடம் கொடுத்து மனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்கத்தைப் பட்டியலிடுகிறது. தனிமனிதனின் அன்பு வேண்டும் ; இன்சொல்ல வேண்டும் ,; அடக்கம் வேண்டும் ; பொறையுடைமை வேண்டும்; புறங்கூறாமை வேண்டும் ; பணிவுடைமை வேண்டும் இன்னும் எத்தனை எத்தனை நல்லறங்கள் உண்டோ அவை அனை த்தையும் பின்பற்றும் தனிமனிதனை விழுப்பம் தரும் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்தது என ஓம்பி இல்லறத்தின் நல்ல உறுப்பினர் ஆகிறான்.

**2. இல்லறம்**

இல்லத்தரசியோ மனத்துக்கண் மாசில்லாது அதனை , அடித்தள மாக்கி அனைத்து அறம் வருவாயில் வாழ்க்கை வாழ வேண்டியவர் ஆகின்றான்.

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்"** (குறள் 46)

**"அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை"** (குறள் 49)

**"அறனிழுக்கா இல்வாழ்க்கை"** (48).

என்றெல்லாம் அறவழியில் வாழ்வாங்கு வாழ வேண்டிய முறைப்படி வாழ வேண்டியவன் ஆகின்றான்.

அவனின் கடமைகளை இயல்புடைய மூவர்க்கும் துணையாகி துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும்,

இறந்தார்க்கும் துணையாகி தென்புலத்தார் , தெய்வம், விருந்து, சுற்றம் தன்னை நிலைப்படுத்தி. தெய்வத்துக்கு இணையாக மதிக்கத்தக்க வாழ்வு வாழ வேண்டியவன் ஆகின்றான். பிறன் மனை நோக்காத அவனும்; கற்பென்னும் திண்மை ஏற்று.அவளும் வாழ்ந்து நன்மக்களைப் பெற்று இல்லறத்தை நல்லறமாய் வாழ்ந்து காட்டினால் தான் அவர்களால் சமுதாயத்திற்கு நல்ல உறுப்பினர்களை உருவாக்கித் தர முடியும்.

**3. சமுதாயக் கடமை**

நன் மக்களை உருவாக்கித் தருதல் மட்டுமே அவன் சமுதாயத்திற்குச் செய்யும் கடமையா ? இல்லை! இல்லவே இல்லை! இன்னும் எத்தனை எத்தனை சமுதாயக் கடமைகள் உண்டு அவை எல்லாம் நிறைவேற்றப்பட்டால் தானே சமுதாய உறவு சிறப்பாக அமைய முடியும்.

**4. பழியஞ்சியப் பொருள் சேர்த்தல்**

இன்றைய சமுதாயம் எப்படி தொழில் செய்கிறோம் என்பதை நோக்குவதில்லை. எப்படியாகினும் பொருள் சேர்த்து விட வேண்டும் என்பதையே தங்கள் நோக்கமாகக் கொண்டு வாழ்கிறது .பொருள் சேர்க்க வேண்டும் என்ற அவருடைய லட்சியம் உயர்வானதாக இருக்கலாம் .ஆனால் எப்படிச் சேர்க்கப் போகிறோம் என்ற வழிமுறையைப் பின்பற்றி சிந்திக்க வேண்டும் அல்லவா. இதைத்தான் காந்தியடிகள் தம்முடைய குறிக்கோள் உயர்வானதாக இருந்தால் மட்டும் போதாது , அதை அடையும் வழியும் நேர்மையானதாக இருக்க வேண்டும் என்கிறார்.

இல்லறத்தான் கடமை பொருள் சேர்த்தல் அதை பொது மறையும் மறுப்பதில்லை. ஆனால் அது பழியஞ்சிச் சேர்க்கப்பட வேண்டும் என்கிறது. தனிமனித உரிமை பறிக்கப்பட்ட கூடாது. ஆனால், அந்த உரிமை நேர்வழியில் பயன்படுத்தப்பட வேண்டும் அதைத்தான் , பொதுமறை பழியஞ்சிச் சேர்த்துப் பகிர்ந்து வாழப் பழக வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

**"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.** (குறள் 44).

என்கிறது.

சமுதாய உறவின் மிக மிக முக்கியமான மறக்க முடியாத , மறுக்க முடியாத உண்மை. இது பகிர்ந்துண்டு வாழும் பண்பு. எப்படிவரும்?. அளவிலா அன்பு வேண்டும்.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"**

**5. சமுதாய உறவுப்பாலம்**

சமுதாய உறவுகள் பெரும்பாலும் துண்டிக்கப்படுவதற்கு முழுமுதற் காரணம் , பொருளாதாரமாகவே இருக்கும். அதனால்தான் இங்கும் காந்தியடிகள் கூறும் கொள்கை பின்பற்ற வேண்டியது உறவுக்குப் பாலமாக விளங்குகிறது எனலாம்.

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.** (குறள் 212)

கோடீஸ்வரர்களின் பட்டியலில் இடம் பெறுவது நமது நோக்கமாக இருக்கக்கூடாது. எவ்வளவு முயன்று தேடினாலும் அது பிறருக்கு உதவி செய்வதற்கு என்ற எண்ணம் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவர் மனதிலும் இடம் பெற்றால் , சமுதாய உறவு வலுப்பெறும் . "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரி" என்ற அத்தகையோரை கைமாறு கருதா மழைக்கு உவமையாகப் பெருமை பொங்கக் கூறிவிட்டே , அவர்களது தேடுதல் முயற்சி பற்றியும் கூறுகிறார் வள்ளுவர்.

அத்தகைய ஒப்புரவை அறியாதவனை " செத்தாருள் வைக்கப்படும் " என்று இழித்துரைக்கிறார். ஆனால் அத்தகைய உறவை சமுதாய உறவை விரும்புபவனை , சமுதாய உறவை பலப்படுத்தும் முயற்சிக்காக , நிறைந்து கிடக்கும் அவனது செல்வத்தை எத்தனை உயரிய உண்மைகள் கூறிப் பாராட்டுகிறார் .

**"ஊருணி நீர் நிறைந்தற்றே"** (குறள் 215)

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் (216)**

**"மருந்தாகித் தப்பா மரம் " (217)**

என்றெல்லாம் வள்ளுவர் பெருமையாகக் கூறுகிறார்.

**முடிவுரை:**

மானிட உறவு பலப்பட வேண்டுமானால் பழி உணர்வு நீங்கி மன்னிக்கும் மனப்பான்மை வேண்டும் என்பது சமயத் திருமறைகளின் துணிவு. பகைமையை பகைமையால் வெல்ல முடியாது என்பது பௌத்த அறநூலின் கருத்து. கிறித்தவ விவிலியம் இன்னும் சற்று மேலே மேலே போய் , உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு என்று அகிம்சை வழிக்கு வித்திடுகிறது. அதனை வெற்றிப் பாதை என நிரூபித்துக் காட்டிவிட்டார் காந்தியடிகள். ஆனால், பொது மறையோ "இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் " என்று ஒருவன் அது தீங்கை மறப்பது மட்டுமல்ல, அவன் செய்த தீங்கை மன்னிப்பது மட்டுமல்ல , அவனுக்கு மேலும் நன்மை செய்வதே அவருக்குச் செய்யும், கொடுக்கும் தண்டனை என்கிறது. மனித உறவுகளை வளர்க்க எத்துணை உயர்வான வழி கூறுகிறது வள்ளுவம்.